பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: | 01 வள்ளுவர் ஆண்டு 2054 | கார்த்திகை 19 | புதன்கிழமை | 06.12.2023 | அதிர்வு 127

## தமிழ் மொழி அமுலாக்கம்: தடையாகவுள்ள ஆளுநர்

**சபையில் வடிவேல் சுரேஷ் சீற்றம்**

“ஊவா மாகாணத்தில் தமிழ் மொழி அமுலாக்கம் அங்கு நியமிக்கப்படுகின்ற ஆளுநர்களின் நடத்தை காரணமாக இல்லாமலாக்கப்பட்டு வருகின்றது. மலையகம் தொடர்பான போதுமான

05▶


# தமிழர்கள் வாழும் இடங்களில் இராணுவ மயமாக்கல் தீவிரம்

## தடைகள் மூலம் இலங்கைக்கு எதிராகக் கடும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று பிரிட்டன் எம்.பி. வலியுறுத்து

**இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் இராணுவ மயமாக்கல் தொடர்கின்றது என்று பிரிட்டனின் தொழிற்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் மக்டொனல் தெரிவித்துள்ளார்.**

**இது பிரிட்டனினதும் சர்வதேச சமூகத்தினதும் கூட்டுத் தோல்வி என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

05▶



# சவேந்திர சில்வா, ஜகத் ஜயசூரியவுக்கு எதிராக உடனடியாகத் தடை விதிக்க வேண்டும் பிரிட்டன்

## லிபரல் ஜனநாயகக் கட்சி கோரிக்கை





அமெரிக்கா, கனடாவைப் பின்பற்றி இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதிகளான ஜெனரல் சவேந்திர சில்வா, ஜெனரல் ஜகத் ஜயசூரிய ஆகியோருக்கு எதிராகப் பிரிட்டன் உடனடியாகத் தடைகளை விதிக்க வேண்டும் என்று லிபரல் ஜனநாயகக் கட்சியின் தலைவர் எட்டேவே கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரிட்டன் நாடாளுமன்றத்தில் இலங்கை குறித்து இடம்பெற்ற விவாதத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு இலங்கையைப் பிரிட்டன் கேட்டுக்கொள்ள வேண்டும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

**- சாய்ந்தமருதில் பதற்றம் -**

# குர்ஆன் மதரஸாவில் இருந்து சிறுவன் ஒருவரின் சடலம் மீட்பு



## நிர்வாகி கைது

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேசத்தில் உள்ள குர்ஆன் மதரஸாவில் இருந்து தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்ட சிறுவனின் மரணத்தில் சந்தேகம் வெளியிட்டு

05▶



கிடைத்த வாய்ப்புக்களை சரியாகப் பயன்படுத்துவதுதான் அரசியல். அதுதான் அரசியலில் வெற்றி தரும். அப்படி ஒரு சந்தர்ப்பத்தை நேற்று வலிமையாகப் பயன்படுத்தியிருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன். சுமந்திரனைக் கொல்ல முயன்றனர் என்ற சந்தேகத்தில் சிலர் கைது செய்யப்பட்டு தடுப்பு

03▶

# தபால் மூலம் அனுப்பப்பட்ட போதைப்பொருள்கள் மீட்பு



தபால் மூலம் இலங்கைக்கு அனுப்பப்பட்ட பெருமளவான போதைப்பொருள் இலங்கை சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகளினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட போதைப்பொருளின் பெறுமதி சுமார் 4 கோடி முப்பது லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது, சந்தேகத்தின் அடிப்படையில் 25 பொதிகளைச் சோதனையிட்ட நிலையில் இந்தத் தொகை போதைப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஜெர்மன் மற்றும் பிரித்தானியாவில் இருந்து இலங்கையில் உள்ள போலியான முகவரிகளுக்கு போதைப்பொருள் அனுப்பப்பட்டுள்ளது.

கொழும்பு, மஹரகம, பத்தரமுல்லை, பொரலஸ்கமுவ, பாணந்துறை, மொரட்டுவ மற்றும் கண்டி ஆகிய பகுதிகளில் உள்ள போலியான முகவரிகளுக்கே இவை அனுப்பப்பட்டுள்ளன.

விசாரணைகள் மூலம் குறித்த முகவரிகள் போலியானவை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இதன்படி, 2193 Methamphetamine (Ecstasy) மாத்திரைகள் மற்றும் 1.74 கிலோகிராம் முரளா போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

# சிறுமியைத் தாக்கிய பங்குத் தந்தையை நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு உத்தரவு

(ந.லோகதயாளன்)

சாவச்சேரியில் உள்ள தேவாலயத்திற்கு ஆராதனைக்குச் செல்லவில்லை என்பதற்காகப் பங்குத் தந்தை ஒருவரால் தாக்கப்பட்டார் எனக் கூறப்படும் சிறுமி சட்ட வைத்திய அதிகாரியின் மருத்துவச் சான்றிதழுடன் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் உள்ள தேவாலயம் ஒன்றின் பங்குத் தந்தையே இவ்வாறு சிறுமியைத் தாக்கினார் எனக் கூறப்படுகின்றது. சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சிறுமி நேற்றைய தினம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியினால் பரிசோதிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

சிறுமியின் உடலில் அடி காயத் தழும்புகள் உள்ளமையால் சிறுமியைத் தாக்கினார் எனக் குற்றஞ் சாட்டப்படும் பங்குத் தந்தையை இன்று மன்றில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# மன்னார் அரச அதிபராக கனகேஸ்வரன் நியமனம்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.06

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் க.கனகேஸ்வரனை மன்னார் மாவட்டச் செயலாளராக நியமிப்பதற்கு நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மருதங்கேணிப் பிரதேச செயலாளராக பணியாற்றி பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தின் மேலதிக அரச அதிபராகப் பணியாற்றிய க.கனகேஸ்வரன் நிர்வாகசேவையின் விசேட தரத்திற்கு தேர்வான நிலையில் வடக்கு மாகாண சபைக்கு நியமிக்கப்பட்டிருந்தார்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராகவுள்ள க.கனகேஸ்வரன் வெற்றிடமாகவுள்ள மன்னார் மாவட்ட அரச அதிபர் பதவிக்கு நியமிப்பதற்காக நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற அமைச்சரவையில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதனால் அடுத்த வாரம் முதல் கனகேஸ்வரன் மன்னார் மாவட்ட அரச அதிபராக நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# டெங்கு விழிப்புணர்வு வீதி நாடகம்

யாழ்ப்பாணம்,டிசெ.06

டெங்கு நோய்ப் பரவல் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாக வீதி நாடகத்தை ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம் நடத்தவுள்ளது.

வித்தியாலய மாணவர்களின் நடிப்பில் உருவாகியுள்ள இந்த விழிப்புணர்வு வீதி நாடகம் இன்று புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் 5 இடங்களில் நடைபெறும் என்று பாடசாலை அதிபர் என்.ரவீந்திரன் அறிவித்துள்ளார்.

இதன்படி, காலை 9 மணிக்கு அச்சுவேலி பஸ் நிலையத்திலும், காலை 9.40 மணிக்கு ஆவரங்கால் விவேகானந்தா முன்பள்ளியிலும், முற்பகல் 10.20 மணிக்கு ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்திலும், முற்பகல் 11 மணிக்கு ஆவரங்கால் மத்தி முன்பள்ளியிலும், முற்பகல் 11.40 மணிக்கு ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்திலும் வீதி நாடகம் நடைபெறும்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காவலில் வைக்கப்பட்டிருந்தனர். சுமந்திரனே அவர்களைக் கைது செய்விக்கச் செய்து, தடுப்புக் காவலில் வைத்திருக்கப் பண்ணியிருக்கின்றார் என்ற தொனியில் நமது வழமையான சமூக ஊடகப் பிரசாரகர்கள் போட்டடித்துக் கொண்டு இருந்தார்கள்.

நாட்டின் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கூட இப்படி யாரோ ஒரு சமூக ஊடகப் பதிவாளரின் கப்ஸாவை விழுங்கிக் கொண்டு வந்து, நாடாளுமன்றத்தில் உரையாற்ற, அந்தச் சந்தர்ப்பத்தை வலுவாகப் பற்றிக் கொண்டு பதிலடி கொடுத்திருக்கிறார் சுமந்திரன்.

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ பொல்லுக் கொடுத்து அடி வாங்கினார் என்பதிலும் பார்க்க, நமது சமூக ஊடகப் பிரகிருதிகள் சிலருக்கு செமத்தியான பதிலடியை நன்கு விளக்கமாகக் கொடுக்க இச்சந்தர்ப்பத்தை சுமந்திரன் பயன்படுத்தியிருக்கின்றார் என்பதுதான் பொருத்தமானது.

நேற்று சுமந்திரன் அளித்த சுமார் ஒரு நிமிட நேரப் பதிலை அப்படியே இங்கு தருகிறேன்:-

“பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஐந்து பேர் கைது செய்யப்பட்டு, என்னைக் கொலை செய்ய முயற்சித்தார்கள் என்ற ரீதியில் வைத்திருக்கின்றார்கள், அவர்களை விடுவிப்பது தொடர்பில் நான் எதுவும் சொல்லவில்லை என்று இங்கு நீதி அமைச்சர் குறை கூறி இருந்தார்.

இது மிகவும் தவறான ஒரு கருத்து. நிலுவையில் உள்ள ஒரு வழக்குப் பற்றி அவர் இப்படிப் பேசியிருக்கக் கூடாது. அது - முதலாவது. இரண்டாவது - அப்படியானவர்கள் கைது செய்யப்படுகின்ற போது நான் முறைப்பாடு எதுவும் செய்யவில்லை. அந்த விடயத்தில் நான் முறைப்பாட்டாளன் அல்லன். அவர்கள் கைது செய்யப்பட்ட உடனேயே, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அவர்களுக்கு எதிராக உபயோகிக்கக் கூடாது என்று நான் பகிரங்கமாகவே சொல்லி இருந்தேன். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அவர்கள் கைது செய்யப்படவில்லை. விசாரணைகளும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடத்தப்படவும் இல்லை. அவர்கள் கைது செய்யப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டமைக்கு நான் எந்த எதிர்ப்புமே தெரிவிக்கவில்லை. அதற்குப் பிறகு சட்டமா அதிபர் வழக்குத் தாக்கல் செய்த வேளையில் கூட, அவர்களுக்கான பிணை விண்ணப்பத்தின் போது என்னுடைய சட்டத்தரணிகள் மூலம் பிணைக்கு எந்தவிதமான மறுப்பும் எனக்கு இல்லை என்று கூறி, அவர்கள் பிணையில் உள்ளனர். ஆகவே பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அவர்கள் அடைக்கப்பட்டு இருக்கவும் இல்லை. பயங்கரவாதத் தடைச் சட்டம் உபயோகிக்கப்படக் கூடாது என்ற என் நிலைப்பாட்டை பகிரங்கமாகவே கூறி இருக்கிறேன். வழக்கு நிலுவையில் இருக்கும் காரணத்தினால் அது தொடர்பில் வேறு விடயங்களை இங்கு பேசுவது முறையற்றது. நீதி அமைச்சருக்கும் அது தெரிந்திருக்க வேண்டும். அவர் தவறி ஒரு கருத்தை மிகக் கீழ்த்தரமான விதத்தில் இங்கு சொல்லியிருப்பது குறித்து நான் கவலைப்படுகிறேன்” - என்று சுமந்திரன் கூறியிருக்கிறார்.

சுமந்திரனைக் கொல்ல முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டில் ஐவர் கைது செய்யப்பட்டமைக்கும் சுமந்திரனுக்கும் எந்த தொடர்பும் இல்லை. அது சட்டத்துறையினதும் பொலிஸினதும் வழமையான நடவடிக்கை. அவர்களை விடுவிக்கக் கோரும் அதிகாரமும் சுமந்திரனுக்கு இல்லை. அவ்வளவுதான் விடயம்.

அது தெரியாமல் - புரியாமல் - ஐவரையும் சுமந்திரன் கைது செய்யப் பண்ணியிருக்கிறார் என்பது போல நமது புலம்பெயர் சமூக ஊடகப் பிரகிருதிகள் பிரசாரம் செய்து வருவது தமிழ் மக்களை முட்டாளாக்கும் வேலை.

அவர்கள் ஐவரும் கைது செய்யப்பட்டு, அது பற்றிய செய்திகள் வெளியான பின்னரே அப்படித் தம்மைக் கொல்ல முயற்சி எடுத்தனர் என்று ஒரு விவகாரம் உள்ளமை பற்றி சுமந்திரன் அறிந்து கொண்டார் என்பதும் குறிப்பிடப்பட வேண்டும்.



# யாழ்., கிழக்கு பல்கலைக்கழகங்களில் இராணுவத்தின் தலையீடு அதிகரிப்பு

## சபையில் கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு



**கொழும்பு, டிசம்பர் 06**

**“யாழ்ப்பாணம் பல்கலைக்கழகமும் கிழக்கு பல்கலைக் கழகமும் கடுமையாக இராணுவ மயப்படுத்தப்படுகின்றது. இராணுவத் தலையீடுகள் மிகவும் அதிகம். அவர்கள் தான் கணிசமான தீர்மானங்களை மேற்கொண்டு தடைகளை உருவாக்குகின்றார்கள்.”**

**- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கல்வி, உயர்கல்வி அமைச்சுக்கள் மீதான விவாவதத்தின்போதே அவர் மேற்கண்டவாறு உரையாற்றினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

”ஆங்கில மொழி பொதுவாக எல்லோருக்கும் பரீட்சயமாக கொண்டு வருதற்குரிய பத்து வருட திட்டமொன்றை அறிமுகப்படுத்தியிருக்கிறீர்கள். அதற்காக கல்வியமைச்சர் மற்றும் ஏனைய துணை அமைச்சர்களையும் பாராட்ட விரும்புகிறேன்.

ஆங்கிலத்தில் கற்று ஆங்கிலத்தின் சாதகங்களை அறிந்தவன் என்ற வகையிலே அனைத்து மக்களுக்கும் அந்த வாய்ப்புக்கள் கிடைக்க வேண்டும் என்பது எனது விருப்பமாக இருந்தாலும், ஒரு நிபந்தனையை முன்வைக்க விரும்புகின்றேன். பல தசாப்தங்காள தமிழிலும் சிங்களத்திலும் கற்றுவந்தவர்களுக்கு திடீரென ஆங்கில மொழி பரீட்சயமாக வருவதற்கு சிறிது காலமெடுக்கும். காலங்காலமாக தாய்மொழியில் கற்று வந்தவர்களுக்கு சட்டக்கல்லூரியில் திடீரென – ஆங்கில மொழியில் பரீட்சை எடுக்க வேண்டும் என விதித்த நிபந்தனை முற்றிலும் தவறானதாகும். சட்டம் என்பது நுணுக்கங்களை கொண்ட விடயம். இந்த நிலையில் பரீட்சயம் இல்லாத புதுமொழியில் திடீரென திணிக்க முயல்வது பாதிப்புக்களை ஏற்படுத்தும். மாறாக சிறிய வயதிலிருந்தே ஆங்கிலத்தில் கற்கக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்துவதே பொருத்தமாக இருக்கும். இதனை நீங்கள் கட்டாயம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

அடுத்ததாக வடக்கு, கிழக்கில் பாடசாலைகள் தொடர்பாக சொல்லும்போது, இன்று மாகாண சபைகள் இயங்குநிலையில் இல்லை. இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஒரு கபினெட் அமைச்சர் வடக்கு, கிழக்கு மாகாண கல்விசார்ந்த விடயங்களை தன்னுடைய சொந்தச் சொத்தாகப் பயன்படுத்தி மிக மோசமான தலையீடுகளை செய்து கொண்டிருக்கின்றார். விசேடமாக இடமாற்றங்களில் இந்த தலையீடுகள் அதிகரித்துள்ளது.

2007ஃ20 என்ற இடமாற்றச் சுற்றுநிருபம் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மட்டுமல்ல முழு நாட்டுக்குமே பொதுவாக இருக்கக்கூடிய நிலையில், மாகாண சபைகளிலும் இவை நடைமுறையிலுள்ளன. ஆனால், வடக்கு கிழக்கில் மிக மோசமாக இருக்கின்றது. இதன் காரணமாக கல்வி நிர்வாகமே குழும்பிப் போகின்ற அளவுக்கு மிக மோசமான தலையீடுகளாக இருக்கின்றது.

ஆதலால் கல்வியமைச்சர் தலையிட்டு அரசியல் தலையீடுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டு முறைப்படி இடமாற்றச் சபையின் முடிவுகளை நடைமுறைப்படுத்துகின்ற ஒரு நிலைமையை உறுதிப் படுத்த வேண்டும். இந்த இடமாற்றச் சபைகளில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள், மற்றும் திணைக்களத் தலைவர்களும் பங்குகொள்கின்றனர். இங்கே சகல விடயங்களும் ஆராயப்பட்டே முடிவுகள் எடுக்கப்படும். ஆகவே அரசியல் தலையீடுகள் நடைபெறாதிருப்பதை நீங்கள் உறுதிப்படுத்தவேண்டும்.

அடுத்து பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் கடந்த வருடங்களில் தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு, கடுமையான அழுத்தங்களை வழங்கிய நிலையில் அவர்களுக்கு வாக்குறுதிகள் வழங்கப்பட்டு – சுபோதினி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை மூன்று படிமுறைகளாக நடைமுறைப்படுத்துவதாக உறுதியளிக்கப்பட்டது. கடந்த காலங்களில் அதன் மூன்றில் ஒரு பகுதி மட்டுமே அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த வரவு செலவுத் திட்டத்தில் அவர்களுக்கு வழங்கவேண்டிய இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்கள் தொடர்பாக எந்த விதமான விடயமும் இங்கு பதிவு செய்யப்படவில்லை. இவை முக்கியமாக கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயம்.

இன்றைக்கு அபிவிருத்தி அவசியமாக தேவைப்படும் நிலையில் கல்வியின் பங்களிப்பு என்பது மிகமுக்கியமானது. அது குழம்புவது என்பது ஆபத்தானதாகும். எனவே ஏற்கனவே நீங்கள் இணங்கிய விடயம் என்ற வகையில் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு அவர்களைத் தள்ளாமல் நீங்களாகவே நடைமுறைப்படுத்துவதற்கு முன்வரவேண்டும் என்றும் இதனை தாமதமின்றி நிறைவேற்றவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

பல்கலைக்கழகங்கள் சம்பந்தமாக சொல்லும்போது – இன்று மூளைசாலிகளின் வெளியேற்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கல்விமான்கள், தொழில்நுட்பவியல் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் நாட்டில் இருக்கக்கூடிய பொருளாதார நெருக்கடியைக் காரணமாக வெளிநாடுகளுக்கு செல்லுகின்ற ஒரு நிலைமை காணப்படுகின்றது. விசேடமாக – கல்வி சார் விடயத்தில் மட்டுமல்ல சுகாதாரத் துறையிலும் கணிசமானவர்களின் வெளியேற்றம் நடைபெறுகின்றன. இவை பெரும் பிரச்சினையான விடயமாகும். இதற்கு பிரதான காரணமாக வரிவிதிப்பு முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி கணிசமாக குறைக்க முடியும். இதன் மூலம் அவர்களை தொடர்ந்தும் இந்த நாட்டுக்குள் வைத்திருக்கக் கூடிய நிலைமையை உருவாக்கமுடியும். அதில் மாற்றங்களைக் கொண்டுவராதவிடத்து மூளைசாலிகள் வெளியேற்றம் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தப்போகின்றது.

விரிவுரையாளர்கள் தங்கள் உயர் பட்டத் தகைமைகளை வெளிநாடுகளில் சென்று பெறுவதற்கு பிணை ஒப்பந்தம் செய்து செல்லவேண்டும். இந்த பிணை ஒப்பந்தம் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதற்கு காரணம் பிணை ஒப்பந்தம் செய்வதற்கு வெளிநாட்டில் புலமைப்பரிசில் வழங்கப்படும் தொகையும் சேர்க்கப்படுகின்றது.

ரூபாயின் பலவீனமான இன்றைய நிலையில் குறித்த பிணைத்தொகையானது அதிகளவானதாக இருக்கும் நிலையில் உயர் கல்வி கற்க விரும்பும் விரிவுரையாளர்கள் குறித்த தொகை பிணைக்குரிய உத்தரவாதத்தை வழங்கும் நபர்களை வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக – தமது விரிவுரையாளர்கள் பதவிகளை துறந்து வெளிநாடுகளுக்கு செல்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதனாலும் கல்வியலாளர்களை கணிசமாக இழக்கப் போகின்றோம். வெளிநாட்டு பல்கலைக் கழகங்கள் புலமைப்பரிசில் வழங்கும் தொகைகளுக்கும் சேர்த்து இத்தகைய பிணை ஒப்பந்தங்களில் பணம் அறவீடு சேர்த்துக்கொள்ளும் முறைமையும் நிறுத்தப்படவேண்டும் என்ற யோசனையை முன்வைக்க விரும்புகின்றேன்.

வெளிநாடு செல்கின்றவர்களும் நாட்டுக்கு திரும்பிவரக்கூடிய நிலையே

**(5ஆம் பக்கம் பார்க்க...)**

## தமிழர்கள் வாழும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைக்கு எதிராகத் தடைகளை விதித்தமைக்காக அமெரிக்கா கனடாவைப் பாராட்டுகின்றது என்று தெரிவித்துள்ள அவர், தடைகள் மற்றும் வர்த்தக வரிகள் மூலம் அதிகூடிய அழுத்தங்களை இலங்கைக்குக் கொடுக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"எனது தொகுதியைச் சேர்ந்த ஒருவர் தனது குடும்பத்தைப் பற்றி அறிய இலங்கைக்குச் சென்றார். அதன் பின்னர் அவர் காணாமல்போய்விட்டார்" – என்றும் பிரிட்டன் எம்.பி. ஜோன் மக்டொனல் மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழ்., கிழக்கு...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

உருவாக்க வேண்டுமே தவிர, வெளிநாடு செல்பவர்கள் நிரந்தரமாக திரும்பி வர முடியாத சூழலை ஏற்படுத்துவது முட்டாள் தனமாகும்.

யாழ். பல்கலைக்கழக கலைப் பிரிவில் குறைந்த அளவான ஆளணியே காணப்படுகின்றது. இதனால் விரிவுரையாளர்களுக்கு அதிக வேலைப்பழு காணப்படுகின்றது. அந்த பழு காரணமாக அவர்கள் ஆய்வு மற்றும் வெளிக்கள ஆய்வுகள் எதுவும் செய்யமுடியாத நிலையில்–வெறுமனே அந்தப் பாடத்துறையில் உள்ள பாடத்திட்டங்களை நிவர்த்தி செய்வதற்குரிய வேலைகளையே செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கல்விக் கலாசாரம் மிகமோசமாகவே அமையும். அந்தவகையில் இவ்விடயம் தொடர்பாக கலைப்பீட மாணவர் ஒன்றியம் எழுதிய கடிதம் ஒன்றையும் சபைக்கு சமர்ப்பிக்கின்றேன். இதனை கருத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

கொழும்பு பல்கலைக்கழகத்துக்கும் கொழும்புக்கு வெளியே இருக்கக்கூடிய பல்கலைக்கழகங்களுக்கும் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவை பாரபட்சங்களாக உள்ளன. விசேடமாக வடக்கு கிழக்கில் இருக்கும் பல்கலைக் கழகங்களில் பாரபட்சங்கள் மிக அதிகம். இந்த பாரபட்சம் மனித வலு ஒதுக்கீடுகளில் மிகப்பெரும் அளவில் காணப்படுகின்றது. உதாரணமாக 2022 ற்கான சமூகவியல் புள்ளிவிபரம் எடுத்துக் காட்டுகின்றேன்.

அரசுக்கு புதிய ஆளணி ஒதுக்கீடுகளை செய்ய முடியாது விட்டாலும் இருக்கின்ற ஆளணியை சமமாகப் பிரிக்கின்ற முறைமையை செய்யாமல், வெறுமனே ஒருசில பல்கலைக்கழகங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஏனைய பல்கலைக் கழகங்களுக்கு கடும் சுமையை கொடுக்கின்ற வகையில் நடந்துகொள்வது ஓரம் கட்டும் செயற்பாடாகவே அமையும்.

என்னைப் பொறுத்த வரையில், பல்கலைக்கழகங்கள் சுதந்திரமான சிந்தனை கொள்ளக்கூடிய இடமாக இருக்க வேண்டும். நாட்டினுடைய ஒட்டுமொத்த எதிர்காலத்துக்கும் வளர்ச்சிக்கும் திறந்த சிந்தனை மையமாக அது இல்லாது விட்டால் அதன் நோக்கமே தோற்கடிக்கப்படுவதாகவே அமையும்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகமும் கிழக்கு பல்கலைக்கழகமும் கடுமையாக இராணுவ மயப்படுத்தப்படுகின்றது. இராணுவத் தலையீடுகள் மிகவும் அதிகம். அவர்கள் தான் கணிசமான தீர்மானங்களை மேற்கொண்டு தடைகளை உருவாக்குகின்றார்கள். பல்கலைக் கழகங்களில் அரசியல் சிந்தனைகளையும் திறந்த உரையாடலுக்கும் விடவேண்டும். ஆனால் யாழ்ப்பாணத்திலும் ஏனைய தமிழ் பல்கலைக்கழகங்களிலும் கடும் கட்டுப்பாடுகளை விதிக்கிறார்கள். அங்கே அரசியலே இருக்கக் கூடாது என்கின்ற அளவுக்குதான் இந்த கட்டுப்பாடுகள் இருக்கிறது. இது என்னைப்பொறுத்தவரையில் பொருத்தமற்ற ஒரு விடயம். இந்தவகையில் இந்த மாற்றங்களையும் செய்ய வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகின்றேன்." – என்றார்.

இதன்போது இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் கருத்துத் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலே சட்டத்தரணி சுவஸ்திகா பேசவிடாமல் தடுக்கப்பட்டார். உண்மையிலே அங்கே இருப்பவர்கள்தான் தடுக்கின்றார்களே தவிர வெளித்தரப்பாலோ அல்லது இராணுவத்தாலோ சொல்லப்பட்ட விடயம் அல்ல என்னும் விடயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்" – என்று குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்திருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி.,

"தனிப்பட்ட முறையில் அந்த அம்மையார் தனது கருத்தைப் பதிவு செய்வதற்கு நான் எதிர்ப்பவன் அல்லன். அவரை உரையாற்ற அனுமதித்திருக்க வேண்டும் என்பதுதான் எனது தனிப்பட்ட கருத்து. ஆனால் – அதற்கு எதிர்ப்பு தெரிவித்த தற்கான நியாயம் என்னவென்றால், அந்த அம்மையாருடைய அரசியல் கருத்துக்களுக்கு நேர் மாறான கருத்தை அந்த பல்கலைக்கழகத்திலோ அல்லது இந்த நாட்டில் இருக்கக் கூடிய எந்தவொரு பல்கலைக்கழகங்களிலோ போய் சொல்ல முடியாது. அந்த அம்மையார் சொல்லும் கருத்தை எல்லா இடத்திலும் போய் சொல்ல முடியும். அதற்கு ஒரு தடையும் விதிக்காமல் வரவேற்பார்கள். ஆனால், இந்தக் கருத்துக்கு நேர்மாறான கருத்துதான் மிகப் பெரும் பெரும்பான்மையினரின் கருத்தாக வடக்கு, கிழக்கில் இருக்கத் தக்கதாக, சுவஸ்திகா போன்றோரின் கருத்தை திணிப்பதற்கு பார்க்கின்றார்களே தவிர, அதற்கு நேர் மாறான கருத்தை எந்தவொரு இடத்திலும் – குறிப்பாக வடக்கு, கிழக்கிலும் சரி அதற்கு வெளியிலும் இருக்கும் பல்கலைக்கழகங்களிலும் சரி கதைக்க முடியாது.

ஆகவே, இதனைத்தான் நான் சொல்லுகின்றேன். இந்த சிந்தனை சுதந்திரத்தை எந்தவொரு தடையும் விதிக்காமல் முழுமையாக அமுல்படுத்த வேண்டும். அதை செய்யாமல் வெறுமனே ஒரே ஒரு கருத்தை மட்டும் திணிக்க முயல்வதை ஏற்க முடியாது" – என்று பதிலளித்தார்.

## தமிழ்மொழி அமுலாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அறிவு இன்மையே இதற்கு காரணமாகும்." – என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்நேற்றுநடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

"மலையகத்தில்சிலபாடசாலைகளுக்கு இலவசக் கல்வியைப் பெற்றுக்கொள்வது தடையாக இருந்து வருகின்றது. பதுளை மாவட்டத்தில் ராபரி கிராமத்தில் இருக்கும் மாணவர்களுக்குப் போக்குவரத்து வசதி இல்லை. அவர்கள் அதிகாலை 4 மணிக்குப் பந்தங்களை ஏந்திக் கொண்டு 15 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும் மடுல்சீமை பஸ் நிலையத்துக்குஹ செல்ல வேண்டிய துர்ப்பாகிய நிலை இருந்து வருகின்றது.

எனினும், மாணவர்களின் ஜி.சீ.ஈ. உயர்தரம் மற்றும் சாதாரண தரப் பெறுபெறுகள் சிறப்பாக உள்ளன.

மலையகத்தில் பாடசாலைகளில் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளபோதும் அந்தப் பாடசாலைகளுக்குத் தேவையான ஆசிரியர்கள் இணைத்துக்கொள்ளப்படவில்லை.

பதுளை மாவட்டத்தில் பசறை தொகுதியில் தமிழ் மொழி மூல மூன்று தேசிய பாடசாலைகளே இருக்கின்றன. இவைகளில் வளங்கள் இருந்தாலும் போதிய ஆசியர்கள் இல்லை.குறிப்பாக ஜி.சீ.ஈ. உயர்தரம் மற்றும் சாதாரண தரப் பாடங்களுக்கு கணிதம், விஞ்ஞானம் பாடங்களுக்கு ஆசிரியர் இல்லை.

அதனால் மலையகப் பாடசாலைகளுக்கும் ஜி.சீ.ஈ. உயர்தர மற்றும் சாதாரண தரப் பாடங்களுக்குத் தேவையான ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் ஊவா மாகாணத்தில் தமிழ் மொழி அமுலாக்கம் ஏற்கனவே இருந்து வந்தது. ஆனால் மாறி மாறி வந்த ஆளுநர்கள், மலையகத்தின் கல்வி. சுகாதாரம் என அனைத்தையும் மட்டம் தட்டி இருக்கிறார்கள்.

நியமிக்கப்படும் ஆளுநர்கள் வெளிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். அதனால் அவர்களுக்கு மலையகம் தொடர்பாக போதுமான அறிவு இல்லை.

ஊவா மாகாணத்தில் 202 தமிழ், முஸ்லிம் பாடசாலைகள் இருக்கின்றன. இந்தப் பாடசாலைகளில் தமிழ் மொழி அமுலாக்கம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

ஊவா மாகாணத்தில் தமிழ் மொழி அமுலாக்கம் அங்கு நியமிக்கப்படுகின்ற ஆளுநர்களின் நடத்தை காரணமாக இல்லாமலாக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்." – என்றார்.

## குர்ஆன் மதரஸாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று இரவு பொதுமக்கள் மதரஸாவை முற்றுகையிட்டு குழப்பத்தில் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்த 13 வயதுடைய எம்.எஸ்.முஷாப் எனும் மாணவனே தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவரின் சடலம் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாய்ந்தமருது பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த மதரஸாவின் நிர்வாகியையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அந்த மாணவனின் மரணம் தற்கொலை அல்ல, கொலையாகவே இருக்கலாம் என்றும், அந்த மதர்ஸாவின் நிர்வாகி மீது ஏற்கனவே பல பொலிஸ் முறைப்பாடுகள் இருக்கின்றன என்றும் கூறி பொதுமக்கள் குழப்பத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது களத்துக்கு வருகை தந்த சாய்ந்தமருது பொலிஸார் மதராஸாவின் மாண்பைப் பேணும் விதமாக மக்கள் கலைந்து செல்லுமாறும், இந்த மரணம் தொடர்பில் நியாயமான விசாரணையை முன்னெடுக்கப் பொலிஸார் தயாராக இருக்கின்றனர் எனவும், தடயவியல் பொலிஸாரையும், நீதிவானையும் வரவழைத்து மேலதிக நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாவும் பொதுமக்களுக்கு வழங்கிய உறுதியையடுத்து பொதுமக்கள் கலைந்து சென்றனர்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தொடரும் காட்டுமிராண்டித்தனம்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இலங்கை தொடர்ந்தும் பயன்படுத்துவதையும், மிகக் கொடூரமான அந்தச் சட்டத்தை தனது குடிமக்கள் மீது இலங்கை அரசு தொடர்ந்து ஏவி விடுகின்றமையையும் மேற்குலகம் திரும்பவும் ஒரு தடவை கண்டித்திருக்கின்றது. தனது பலத்த ஆட்சேபனையை வெளிப்படுத்தி இருக்கின்றது.

இதுதொடர்பில்இலங்கைக்கானஅமெரிக்க தூதுவர் மற்றும் இலங்கையில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய அலுவலகம் ஆகிய தரப்புகள் தனித்தனியாகக் கண்டன ஆட்சேபனைச் செய்திகளை ட்விட்டர் மூலம் வெளியிட்டு இருக்கின்றமை அவதானிக்கத் தக்கதாகும்.

"அமைதியான போராட்டக்காரர்களை கைது செய்தல் மற்றும் சிறைகளில் கைதிகளை நடத்துவது உட்பட பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தொடர்ந்து பயன்படுத்துவது குறித்துக் கேள்விப்படுவது கவலை அளிக்கிறது. காவலில் இருப்பவர்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் மனிதாபிமானத்துடன் அவர்கள் நடத்தப்படுவதை உறுதி செய்வது இன்றியமையாதது. குறிப்பாக அரசாங்கம் அதன் சர்வதேச கடப்பாடுகளுக்கு இணங்கப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றியமைத்து, முக்கிய சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். அத்தோடு அது அடிப்படைச் சுதந்திரங்களைப் பாதுகாக்க வேண்டும்." - என்று கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் தெரிவித்து இருக்கின்றார்.

"ஆள்களைக் கைது செய்ய பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் தொடர்ந்து பயன்படுத்துகின்றமை குறித்துக் கவலை கொள்ளுகிறோம். அதிகாரிகள் சர்வதேச தரநிலைகள் மற்றும் மனித உரிமைகள் மரபுகளுக்கு ஏற்ப சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். அத்தோடு தாங்கள் வழங்கிய உறுதிமொழிகளின் படி பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும்." - என்று கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய அலுவலகம் தனது டுவிட்டர் செய்தியில் தெரிவித்துருக்கின்றது.

அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் இது விடயத்தில் 'மயிலே! மயிலே! இறகு போடு!' என்றால் மயில் இறகு போடும் என்ற கணக்கில் வெறும் வார்த்தை ஜாலங்களில் அறிக்கை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. செயலில் அது நடக்கப் போவதில்லை என்று தெரிந்தும், ஆண்டு கணக்கில் இந்த இழுபறியில், வக்கற்ற விதத்தில் - கையாலாகாத்தனத்தில் - அவை அறிக்கை வெளியிட்டு, தங்களைத் தாங்களே திருப்திப் படுத்திக் கொள்கின்றன. அவ்வளவுதான்.

இலங்கையில் மனித உரிமைகள் பேணும் விடயம் மிக மோசமான கட்டத்தை அடைந்த போதுதான் அதுவரை இலங்கைக்கு வழங்கி வந்த ஜி.எஸ்.பி. தீர்வையற்ற ஏற்றுமதிச் சலுகையை 2007 இல் ஐரோப்பிய ஒன்றியம் நிறுத்தியது. அதை ஐரோப்பிய ஒன்றியம் நிறுத்தினால் எங்களுக்குக் கவலை இல்லை என்று அப்போது ஆட்சியில் இருந்த மஹிந்த ராஜபக்ஷ அரசு விட்டேத்தியாக ஐரோப்பிய ஒன்றியத்தைத் தூக்கி எறிந்து பதிலளித்தது.

பின்னர் 2015இல் ஆட்சிக்கு - அதிகாரத்துக்கு - வந்த நல்லாட்சி அரசு ஐரோப்பிய ஒன்றியத்தின் கை, கால்களில் விழுந்து அந்த வரிச்சலுகையை மீண்டும் வழங்கக் கெஞ்சிக் கூத்தாடியது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இலங்கை உடனடியாக நீக்கும் அல்லது மாற்றி அமைக்கும் என்ற உத்தரவாதத்தின் கீழ் தான் - உறுதிமொழியின் மீது தான் - அந்தச் சலுகை பின்னர் 2017 இல் இருந்து இலங்கைக்கு வழங்கப்பட்டது.

அச்சலுகை மூலம் ஏற்றுமதி வருமானத்தைஇலங்கைகணிசமாகஈட்டிக்கொண்டிருக்கின்றது. நாட்டின் பொருளாதாரம் நலிவுற்று மிக மோசமான கட்டத்தை எட்டிய வேளை, இலங்கைக்குக் கடைசி உயிர்மூச்சைக் கொடுக்கும் வருமானமாக அந்த ஏற்றுமதி மட்டுமே வாய்த்தமையும் மறுக்க முடியாதது.

திரும்ப வாக்குறுதி அளித்து 6 ஆண்டுகள் கடந்தும் அந்த மனிதாபிமானம் இல்லாத - காட்டுமிராண்டித்தனமான - மிருகத்தனமான - கொடூர - சட்டத்தை இலங்கை மக்கள் மீது, குறிப்பாக சிறுபான்மையினரான தமிழ் மக்கள் மீது, பிரயோகிக்கும் போக்கு நிற்கவில்லை. உயிரிழந்த தங்கள் உறவுகளை நினைவேந்து மக்கள் மீதும் கூட அந்தக் கொடூரச் சட்டமே பாய்கின்றது.

இந்த விடயத்தில் அமெரிக்காவும் முழு ஐரோப்பிய நாடுகளையும் உள்ளடக்கிய ஐரோப்பிய ஒன்றியமும் வெறும் வாய் வார்த்தைகளில் அறிக்கைகளை - ஆட்சேபங்களை - கண்டனங்களை - வெளியிட்டுக் கொண்டிருக்க வேண்டியதுதான். இலங்கை தனது கொடூரப் பண்பியல்பை மாற்றாமல் தன் காட்டுமிராண்டித்தனத்தை சட்ட மற்றும் நீதித்துறையில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும்.

# 13ஆவது திருத்தம்தான் தீர்வுக்கான ஆரம்பப்படி

## நிதர்சனமாகி வருகின்றது என்கிறார் ஈ.பி.டி.பியின் பேச்சாளர்

(எஸ்.நிதர்ஷன்)

**"அமிழ்ந்துபோயிருந்த 13 ஆவது திருத்தச் சட்டம் பேசாப்பொருளாகியிருந்த நிலையிலும் தொடர்ச்சியாக நாடாளுமன்றத்திலும் அறிக்கைகள் மூலமும் தமிழர்களின் அரசியல் தீர்வுக்கு 13 ஆவது திருத்தச் சட்டம்தான் தீர்வை நோக்கிய ஆரம்பப்படி என நாம் வலியுறுத்தி வந்தது நிதர்சனமாகி வருகின்றது."**

**- இவ்வாறு ஈழ மக்கள் ஜனாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட உதவி நிர்வாகச் செயலாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**




யாழ். ஊடக அமையத்தில் நேற்று ஊடக சந்திப்பை நடத்தியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சமீபத்தில் புதுடில்லியில் சில இந்து அமைப்புகள், புலம்பெயர் சிவில் அமைப்பினர், வடக்கு - கிழக்கின் சில அரசியல் பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடி தமிழ் மக்கள் அரசியல் உரிமை பெற இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இந்தியா தலையீடு செய்யவேண்டும் என கூட்டாக வலியுறுத்தியதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

முன்பதாக கிழக்கு மாகாணம் அரச தரப்பினரால் விடுவிக்கப்பட்டதும் தேர்தல் மூலம் மாகாண அதிகாரத்தை மக்களிடம் வழங்குமாறு நாம் கோரியிருந்தோம். குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அன்று நாடாளுமன்றத்தை அலங்கரித்திருந்தாலும் தனி ஒரு நபராக இருந்து அதனை நாம் வலியுறுத்தியிருந்தோம்.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாட்டில் இலங்கையின் நிர்வாக அலகு மாவட்ட அலகாகவே இருக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருந்தது. அதன்போது கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எவ்விதமான கருத்தையும் தெரிவித்திருக்கவில்லை.

ஆனால், எமது தலைவர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே குறித்த கருத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு என்றும், எமது நிலைப்பாடு இலங்கையின் நிர்வாக அலகு மாகாண நிர்வாக அலகாகவே இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார்.

இதேபோன்று வடக்கு மாகாணத்திலும் பேசு பொருளாக இருந்த 13 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்கின்ற நோக்கில் யார் ஆட்சிக்கு வருகின்றார்கள் என்பது முக்கியமல்ல மாகாண முறைமையை பாதுகாக்க வேண்டும், அது ஜனாநயக ரீதியில் மக்களிடம் ஆட்சி செய்ய வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கில் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறும் வலியுறுத்தியிருந்தோம்.

தேர்தல் நடத்தப்பட்டு வடக்கு மாகாண சபையின் ஆட்சிக்கு விசேடமாக 5 ஆயிரத்து 500 மில்லியன் நிதி மத்திய அரசால் வழங்கப்பட்டது. ஆனால், குறித்த நிதியை ஆட்சி செய்தவர்கள் தமது இயலாமையால் முறையாக மக்களுக்கானதாக கொண்டு சேர்க்கவில்லை என்பதும் வரலாறு.

இதனிடையே மாகாணங்களுக்கு அதிகாரங்களை குறைப்பதற்கு ஜே.வி.பி., ஹெல உறுமய, ஜாதிக ஹெல உறுமய போன்ற தென்னிலங்கை இனவாதக் கட்சிகள் முயன்ற போதும் தென்னிலங்கையைச் சேர்ந்த சகோதர மொழி பேசும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் முஸ்லிம், மலையகக் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்களிப்புடன் 50 மேற்பட்ட கையொப்பங்களைப் பெற்று அந்த முயற்சியை தடுத்து நிறுத்தியிருந்தோம்.

நாட்டில் யுத்தம் வலுவாக இருந்த நிலையிலும் நாம் இதனையே வலியுறுத்தியிருந்தோம். ஆனால், இப்போது இவர்கள் காவடி எடுத்துள்ளனர். ஜனாதிபதி அழைத்தும் போகாத இவர்கள் அதனைக் கிடப்பில் போட்டுவிட்டு பின்னர் ஈஸ்டர் தாக்குதல், குருந்தூர் மலை விவகாரம், வெடுக்கு நாறி ஆலய விவகாரம் என அவ்வப்போது ஏற்படும் பிரச்சினைகளைக் காரணம் காட்டி அடிப்படைப் பிரச்சினையைத் தீர்க்க முன்வராதிருந்தனர்.

இதனிடையே ஐ.நா. மனித உரிமைகள் பேரவையும் 13 ஆவது வரைபைத்தான் நடைமுறைப் படுத்துமாறு கோருகின்றது. இப்போது இவர்கள் புதுடில்லிக்குச் சென்று இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோருவது இதயசுத்தியுடன் உண்மையானதாக இருக்குமாயின் அதனை முதலில் நாமே வரவேற்போம்.

13 ஆவது திருத்தச் சட்டமானது இலங்கையின் அரசியல் யாப்பில் உள்வாங்கப்பட்ட விடயம் என்பதால் இதை நடைமுறைப்படுத்தவதில் தடை ஏதும் இருக்கப் போவதில்லை. ஆனால், புதிதாக ஏதாவதொன்று வருமாயின் அது கடும் வாதப்பிரதிவாதங்கள் மற்றும் மூன்றில்இரண்டு பெரும்பான்மை எனப் பல பிரச்சினைகளை எதிர்கொண்டு காலதாமதமாக வாய்ப்பிருக்கின்றது.

எனவே, நாம் நீண்டகாலமாக வலியுறுத்திவரும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதில் எந்தத் தடையும் இருக்கப்போவதில்லை." - என்றார்.

# ஆந்திராவை ஊடறுத்துள்ள மிக்ஜாம் சூறாவளி: உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 17 ஆக அதிகரிப்பு!






இந்தியாவில் மிக்ஜாம் சூறாவளியினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 17 ஆக அதிகரித்துள்ளது.

இந்தியாவின் தெற்கு ஆந்திர பிரதேசத்தை ஊடறுத்துள்ள சூறாவளியினால், கடும் காற்றுடன் கூடிய மழையுடனான வானிலை அங்கு நிலவுகின்றது.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 9 ஆயிரத்து 500 பேர் 211 நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், குறித்த சூறாவளி 110 கிலோ மீற்றர் வேகத்தில் வீசுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கக்கடலில் கடந்த 27 ஆம் திகதி உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி புயலாக மாறியது.

மிக்ஜாம் என பெயரிடப்பட்டுள்ள இந்த புயலால் சென்னை உள்ளிட்ட தமிழகத்தின் பல மாவட்டங்களில் நேற்று முன்தினம் முதல் கடும் காற்றுடன் பலத்த மழை பெய்து வருகிறது.

தெற்கு ஆந்திராவில் நிலை கொண் டிருந்த மிக்ஜாம் தீவிர புயலாக ஆந்திர கடற்கரையை அண்மித்த பாபட்லா பகுதியில் கரையைக் கடந்துள்ளது.

புயல் கரையை கடந்த வேளை, மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசியதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# இண்டியா கூட்டணி கூட்டம் ஒத்திவைப்பு: மம்தா, நிதிஷ், அகிலேஷ் பங்கேற்க மறுப்பு



டில்லியில் இன்று நடைபெறவிருந்த இண்டியா கூட்டணியின் ஆலோசனைக் கூட்டத்தில், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, பிஹார் முதல்வர் நிதிஷ் குமார் மற்றும் சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் ஆகியோர் கலந்து கொள்ள மறுப்பு தெரிவித்தனர்.

இதனையடுத்து, அந்த கூட்டம் ஒத்திவைக்கப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் பா.ஜ.கவைத் தோற்கடிக்கும் நோக்கத்துடன் 26 எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து பா.ஜ.கவுக்கு எதிராக கூட்டணி அமைத்தன. இந்தக் கூட்டணிக்காக கட்சிகளை இணைக்கும் வேலைகளில் ஐக்கிய ஜனதாதளம் தலைவர் முக்கிய பங்காற்றினார்.

மூன்று கூட்டம் நடந்து முடிந்த நிலையில், இண்டியா கூட்டணியின் அடுத்த கூட்டம் இன்று டெல்லியில் நடைபெறவிருப்பதாகவும், கூட்டணி கட்சிகள் கலந்து கொள்ளுமாறும் அண்மையில் அழைப்பு விடுத்திருந்தார் கார்கே.

இந்த நிலையில், இண்டியா கூட்டணியின் ஆலோசனைக் கூட்டத்தில் மம்தா பானர்ஜி, அகிலேஷ் யாதவ் மற்றும் நிதிஷ் குமார் ஆகியோர் பங்கேற்க மாட்டார்கள் என தகவல் வெளியானது.

அதுமட்டுமல்லாமல் மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான, சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களில் பா.ஜ.க. அமோக வெற்றி பெற்றது. தெலுங்கானாவில் மட்டும் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது. தற்போது இந்தக் கூட்டணியில் ஏதோ விரிசல் ஏற்பட்டிருப்பதாக பேசப்படுகிறது.

முன்னதாக, “காங்கிரஸ் கட்சி நடைபெறவிருக்கும் ஐந்து மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களில்தான் அதிக ஆர்வம் காட்டி வருகிறது” என பிஹார் முதல்வர் நிதிஷ் குமார் அதிருப்தி தெரிவித்திருந்தார்.

அத்தோடு, இன்று முக்கியமான தலைவர்கள் பங்கேற்காமல் ஆலோ---சனை கூட்டம் நடைபெற்றால், அது சரியாக இருக்காது என முக்கியத் தலைவர்கள் மத்தியில் பரவலாக பேசப்பட்டதாக தெரிகிறது.

இதையடுத்து, இண்டியா கூட்டணியின் ஆலோசனைக் கூட்டம் டிசம்பர் 3 ஆவது வாரத்துக்கு ஒத்திவைக்கப் படுவதாக காங்கிரஸ் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய ஆயுதத்தை கையாளும் ஹமாஸ்: ஆதாரங்களை வெளியிடும் இஸ்ரேல்



இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனுக்கிடையிலான போர் நாளாந்தம் தீவிரமடைந்து வரும் நிலையில், பாலியல் ரீதியான வன்முறைகளை ஹமாஸ் ஒரு ஆயுதமாக பயன்படுத்துவதாக இஸ்ரேலிய சட்டத்தரணி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இரு தரப்பினருக்கான போருக்கு மத்தியில், பல பெண்கள் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டுள்ளதை சமூக ஊடகங்களில் வெளியாகும் காணொலிகளின் மூலம் தெளிவாகியுள்ளதாக பேராசிரியரும் சட்டத்தரணியுமான ரூத் ஹல்பெரின் – கடாரி தெரிவித்துள்ளார்.

இதனை எந்த சந்தேகமுமின்றி உறுதிப்படுத்த முடியுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஹமாஸின் தாக்குதல்களிலிருந்து தங்களை காப்பாற்றிக் கொள்வதற்காக புதர்களில் மறைந்து இருந்தவர்கள், ஏனைய பெண்கள் பாலியல் வனபுணர்வுக்குட்படுத்தப்படுவதை நேரில் பார்த்தமை தொடர்பில் தமக்கு தெரியப்படுத்தியதாக ரூத் ஹல்பெரின்–கடாரி தெரிவித்துள்ளார்.

இதன்படி, ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட சாட்சிகள் மற்றும் மருத்துவர்களிடம் இது தொடர்பான வாக்குமூலங்கள் கிடைக்கப் பெற்றுள் ளதாக இஸ்ரேலியபொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், கூட்டு பலாத்காரம் காரணமாக உயிரிழந்தவர்கள் தொடர்பான விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி முதல், ஹமாஸின் வன்முறைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும், இது தொடர்பான கூற்றுக்களை ஒப்புக் கொள்ள சில ஐ.நா அமைப்புகள் தவறியுள்ளமை தம்மை கோபப்படுத்துவதாகவும் ரூத் ஹல்பெரின்–கடாரி கூறியுள்ளார்.

எனினும், பெண்கள் தமது இயக்கத்தால் பாலியல் ரீதியில் வன் புணர்வுக்குட்படுத்தப்படுவதை ஹமாஸ் இயக்கம் நிராகரித்துள்ளது.

# புலம்பெயர்வைக் குறைப்பதற்கு பிரித்தானியா கடும் நடவடிக்கை!

பிரித்தானிய அரசாங்கம் புலம்பெயர்வைக் குறைப்பதற்கான கடுமையான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

உத்தியோகப்பூர்வ புள்ளிவிபரங்களின்படி 2022 இல் இங்கிலாந்திற்கு நிகர இடம்பெயர்வு 7 லட்சத்து 45 ஆயிரமாக உயர்ந்ததை தொடர்ந்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் தெரிவிக்கையில்,

குடியேற்றம் மிக அதிகமாக உள்ளது. இன்று நாம் அதைக் குறைக்க தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

இந்த நடவடிக்கைகள் பிரித்தானியாக்கு நன்மையளிப்பதோடு பிரித்தானிய வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு புலம்பெயர்தலை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தனது உத்தியோகப்பூர்வ எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளார்.

அதன்படி வெளிநாட்டுப் பராமரிப்புப் பணியாளர்கள் தங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்களை அழைத்து வர முடியாது.

இதேவேளை, மாணவர் விசாக்களிலும் சில கட்டுப்பாடுகள் கடைப்பிடிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சட்டப்பூர்வ குடியேற்ற வாசிகளை தவிர்த்து படகுகளில் பிரித்தானியாவுக்கு நுழைபவர்களின் வருகையையும் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.



# இலங்கை - இந்திய இராணுவத் தளபதிகள் புதுடில்லி தலைமையகத்தில் முக்கிய சந்திப்பு

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே, இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் மனோஜ் பாண்டேவை சந்தித்துள்ளார்.

புது டில்லியிலுள்ள இராணுவ தலை மையகத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இந்திய இராணுவத்தினரால், இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகேவிற்கு சம்பிரதாய அணிவகுப்பு மரியாதையும் வழங்கப்பட்டுள்ளது.

இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு, பயிற்சி தொகுதிகளை மேம்படுத்து தல், பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் இருதரப்பு இராணுவங்கள் மற்றும் ஆயுதப்படைகளுக்கு இடையிலான நட்புறவு தொடர்பான விடயங்கள் குறித்து இரு நாட்டு இராணுவத் தளபதிகளும் கலந்துரையாடியுள்ளனர்.




இங்கு நல்லெண்ணத்தின் அடை யாளமாக நினைவுச் சின்னங்களும் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

# காணி தகராறில் தனது சகோதரியையே கத்தியால் காயப்படுத்திய கான்ஸ்டபிள்!

**(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)**

கற்பிட்டி நுரைச்சோலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் தனது சகோத ரியை வீச்சுக் கத்தியால் காயப்படுத் திய குற்றச்சாட்டில் கைது செய்யப் பட்டுள்ளார்.

இது பற்றித் தெரியவருவதாவது:-

புத்தளம் பல்லம பகுதியைச் சேர்ந்த மேற்படி பொலிஸ் கான்ஸ்டபிள் பல்லம திம்பிரிகொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த தனது சகோதரியுடன் ஏற்பட்ட காணித்



தகராறு காரணமாக தனது சகோத ரியை வீச்சுக் கத்தி ஒன்றினால் காயப் படுத்தினார் எனப் பல்லம பொலிஸா ருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப் படையில் பொலிஸ் கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன எனப் பல்லம பொலி ஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த கான்ஸ் டபிளின் சகோதரி சிலாபம் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளை ஆனமடுவ நீதிமன் றத்தில் ஆஜர்படுத்த பல்லம பொலிஸார் நடவடிக்கை மேற்கொள்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பேர வாவி அபிவிருத்தித் திட்டம் தொடர்பான அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும்



பேர வாவி அபிவிருத்தி திட்டத்தின் தரம் மற்றும் எதிர்கால திட்டங்கள் குறித்து தயாரிக்கப்பட்ட அறிக்கை இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதியிடம் கையளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கொழும்பு நகரை அழகுபடுத்தும் திட்டம் மற்றும் அதன் தற்போதைய முன்னேற்றம் தொடர்பான அறிக்கையை உடனடியாக ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனப் பிரதானிகளுக்கு சாகல ரத்நாயக்க அறிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே சாகல ரத்நாயக்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

பேர வாவியை அபிவிருத்தி செய்தல், பேர வாவிக்கு திருப்பி விடப்படும் கழிவுநீர் குழாய்களைத் தடுத்தல், வாவியில் உள்ள பாக்டீரியா மற்றும் பாசிகளின் அளவை குறைத்தல் உள்ளிட்ட திட்டத்தின் முன்னேற்றம் குறித்தும் இங்கு ஆராயப்பட்டுள்ளது.

புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள பஸ் நிலையம் அமைந்துள்ள காணியை தனியார் துறையினருடன் இணைந்து வர்த்தக செயற்பாடுகளுக்காக அபிவிருத்தி செய்தல், கொழும்பு நகரிலுள்ள பாதுகாப்பற்ற மரங்களை அகற்றி, பொருத்தமான மரங்களை நடுவது குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், எதிர்வரும் கிறிஸ்துமஸ் பண்டிகைக் காலத்தில் கொழும்பில் ஏற்படும் நெரிசலைக் குறைப்பதற்கும், முகாமைத்துவம் செய்வதற்கும் இலங்கை பொலிஸ், கொழும்பு மாநகர சபை மற்றும் வர்த்தக சங்கங்கள் இணைந்து வேலைத்திட்டம் ஒன்றை தயாரிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.


# நெதர்லாந்தினால் மீளக் கையளிக்கப்பட்ட தொல்பொருள்களைப் பார்வையிட வாய்ப்பு

நெதர்லாந்தினால் மீளக் கையளிக்கப்பட்ட தொல்பொருள்கள் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

தொல்பொருள்களை மக்கள் பார்வைக்காக திறந்து வைக்கும் நிகழ்வு புத்தசாசன மற்றும் சமய, கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக் குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க ஆகியோர் தலைமையில் நேற்று தேசிய அருங்காட்சியகத்தில் நடைபெற்றது.

தங்கத்தால் தயாரிக்கப்பட்ட உறையுடன் கூடிய வாள், வெள்ளியினால் செய்யப்பட்ட உறையுடன் கூடிய வாள், தங்கத்தால் செய்யப்பட்ட கத்தி, 02 துப்பாக்கிகள், லெவ்கே பிரிவுக்கு சொந்தமானதென கருதப்படும் பீரங்கி உள்ளிட்ட 06 தொல்பொருள்களும் 1765 ஆம் ஆண்டில் ஒல்லாந்தர் கண்டி அரச மாளிகையைச் சுற்றிவளைத்த போது கிழக்கிந்திய ஒல்லாந்து நிறுவனத்தினால் எடுத்துச்செல்லப்பட்டிருந்தன.

பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் உறுதிப்பாடுகளை மையப்படுத்தி, இந்த தொல்பொருள்களை




இலங்கைக்கு மீளக் கையளிக்குமாறு இராஜதந்திர அடிப்படையில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய, இரு நாடுகளுக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளை பலப்படுத்தும் விசேட நிகழ்வாக 06 தொல்லியல் பொருட்களும் உத்தியோகபூர்வமாக இலங்கைக்கு மீள வழங்கப்பட்டன.

இந்த தொல்பொருள்கள் இன்று முதல் மறு அறிவித்தல் வரையில் கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தில் மக்கள் பாவனைக்காக வைக்கப்படவுள்ளன.

இந்த விசேட நிகழ்வை அடையாளப்படுத்தும் வகையில், விசேட முத்திரையொன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

# ஜோசப் ஸ்டாலினுக்கு எதிராக நீதிமன்றினால் தடை உத்தரவு




ஆசிரியர் அதிபர் தொழிற்சங்க கூட்டமைப்பின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் மஹிந்த ஜயசிங்க உள்ளிட்டோருக்கு எதிராக நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு எதிராக, பொல்துவ சந்தி முதல் நாடாளுமன்ற நுழைவு வரையில், பொதுமக்களுக்கு அழுத்தத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு மாத்திரம் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

கொழும்பு மேலதிக நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

எவ்வாறாயினும், அமைதியான முறையில் எதிர்ப்பை வெளிப்படுத்தவும், கருத்துகளை வெளியிடுவதற்கும் இதனூடாக எந்தவொரு பாதிப்பும் ஏற்படாது என நீதிமன்ற உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# போலிக் கல்வி நிறுவனத்தை நடத்திய இளம் யுவதி கைது!



போலிக் கல்வி நிறுவனமொன்றை நடத்திச்சென்றார் எனக் கூறப்படும் யுவதி ஒருவர் பம்பலப்பிட்டியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிரிஉல்ல – நாராங்கமுவ பகுதியை சேர்ந்த 24 வயதான யுவதி ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து மாணவர்களை ஒன்லைன் ஊடாக இணைத்து, செயலமர்வுகளை நடத்தி, போலியான டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்காக மாணவர் ஒருவரிடமிருந்து ஒரு லட்சம் ரூபா முதல் 4 லட்சத்து 45 ஆயிரம் ரூபா வரை அறவிடப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாகப் பணம் பெற்றுக் கொண்டமை தொடர்பில் இதுவரை 43 முறைப்பாடுகள் பொலிஸ் நிலையத்திற்குக் கிடைத்துள்ளன.

ஆயிரக்கணக்கானோர் இந்த கல்வி நிறுவனத்தில் பதிவு செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த கல்வி நிறுவனம் உள்ளூர் அல்லது சர்வதேச தரம் இன்றியும், தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அனுமதியின்றியும் நடத்திச்செல்லப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.







# சீனாவிடம் முன்பதிவு செய்யப்பட்ட 2 நவீன விமானங்கள் வந்தடைந்தன

சீனாவிடம் முன்பதிவு செய்யப்பட்ட 2 நவீன வு-12-ஐஐ விமானங்கள் நாட்டை வந்தடைந்துள்ளன.

இந்த இரண்டு விமானங்களும் இலங்கை விமானப் படையிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவுள்ளன.

வு-12ஈஐஐ விமானங்கள் தற்போது இரத்மலானை விமானப்படை தளத்தில் தரையிறக்கப்பட்டுள்ளன.




# யாழ். பல்கலையின் சட்ட பீட மாணவர்கள் தமிழ் மொழியில் தொடர வசதி வேண்டும்

## சிற்தரன் எம்.பி. சபையில் கோரிக்கை

"யாழ்.பல்கலைக்கழக சட்ட பீட மாணவர்கள் தமிழ் மொழியில் சட்டக் கல்வியைத் தொடர்வதற்கும் வசதி களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்."

– இவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப் பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் வலியுறுத்தி னார்

நாடாளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற வரவு– செலவுத் திட்டத்தின் கல்வியமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக் கையில் –

"பேராதனைப் பல்கலைக்கழகத் தில் சட்ட பீட மாணவர்கள் தமிழ்,ஆங்கி லம் மற்றும் சிங்களம் மொழியில் கற்ப தற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள் ளது. ஆனால் யாழ்ப்பாணம் பல்க லைக்கழகத்தில் சட்ட பீட மாணவர்கள் தமிழ் மொழியில் சட்டக் கல்வியை தொடர வாய்ப்பில்லை. தமது தாய்மொழி யில் சட்ட கல்வியை கற்க எதிர்பார்க் கிறார்கள். ஆகவே அதற்கான வசதி களை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1988 ஆம் ஆண்டு நான் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்ட பீடத்துக்கு தெரிவானேன்அ. ப்போதைய சூழ் நிலையால் என்னால் சட்டக் கல்வி யைத் தொடர முடியவில்லை. சட்டக் கல்வி வாய்ப்பு யாழ்.பல்கலைக்கழத் தில் இருந்திருந்தால் நானும் ஒரு சட்டத்தரணியாகியிருப்பேன். ஆகவே தமிழ் மாணவர்கள் தமது தாய் மொழியில் சட்டத்தைக் கற்கும் வாய்ப்பை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய மிக முக்கிய பல்கலைக் கழகமாக உள்ளது. யாழ்.பல்க லைக்கழகத்தின் கல்வியற் துறையை "பீடமாக " உருவாக்குமாறு கடந்த ஆண்டும் வலியுறுத்தினேன். ஆனால் இதுவரை அந்தக் கோரிக்கை நிறை வேற்றப்படவில்லை.

தேசிய கல்வி நிறுவகத்தின் கிளையை முல்லைத்தீவு, மாங்குளத் தில் நிறுவுமாறு பலமுறை வலியுறுத்தி யுள்ளேன். தற்போதைய பொருளா தார சுமைகளுக்கு மத்தியில் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ளவர்கள் தமது துறைசார் நடவடிக்கைகளுக்காக தலை நகருக்கு வருவதால் பல சிரமங்களை எதிர்கொள்கிறார்கள். ஆகவே இந்தக் கோரிக்கை தொடர்பில் கரிசனை கொள் ளுங்கள் எனக் கேட்டுக்கொண்டார்.

யாழ்.தீவக பாடசாலைகளில் சேவை யாற்றும் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் கடினமான முறையில்தான் சேவையில் ஈடுபடுகிறார்கள்.ஆகவே அவர்களுக்கு விசேட கொடுப்பனவுகளை வழங்க வேண்டும்" – என்றார்.

# மழையுடனான வானிலை குறைவடையும்: வளிமண்டலவியல் திணைக்களம் தகவல்

மழையுடனான வானிலை குறை வடையக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட மிக்ஜம் புயலின் தாக்கம் குறைவடைந்து வருவதால், மழையுடனான வானிலை குறைவடையும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.



எவ்வாறாயினும் சப்ரகமுவ, மத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் செவ்வாய் இரவு இடைக்கிடையே மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட மிக்ஜம் புயல், தற்போது தெற்கு ஆந்திர பகுதியை நோக்கி நகர்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிங்களம் மட்டும் என்றால் முன்னேற முடியாது: ஆங்கிலக் கல்விக்கும் முன்னுரிமை வேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

"சிங்களம் மட்டும் என்று கூறும் பொறிமுறைக்குள் இருந்து கொண்டு ஒரு நாடாக முன்னேற முடியாது. சிங்கள மொழி உள்ளடங்கலாகப் பிற மொழிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவது போல் ஆங்கில மொழிக் கல்விக்கும் முன்னுரிமை வழங்க வேண்டிய நேரம் வந்துள்ளது."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"எமது நாட்டின் கல்விப் பரப்பில் புதிய மாற்றங்களை உள்வாங்கி கல்வியின் புதிய யுகத்திற்குள் நுழைய வேண்டும். 50 களில் இருந்து சிங்களம் மட்டும் என்று கூறும் பொறிமுறைக்குள் இருந்து கொண்டு ஒரு நாடாக முன்னேற முடியாது. நாமாகவே சுவர்களைக் கட்டிக்கொண்டு, எல்லைகளை வகுத்து, குறுகிய மனப்பாங்குடன் செயல்படும் போக்கில் ஒரு நாடாக உண்மையான சுபீட்சத்தை எட்ட முடியாது என்பதால், சிங்கள மொழி உள்ளடங்கலாகப் பிற மொழிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படுவது போலவே ஆங்கில மொழிக் கல்விக்கும் முன்னுரிமை வழங்க வேண்டிய நேரம் வந்துள்ளது. – என்றார்.

எனவே, நாட்டில் இருக்கும் 10,126 பாடசாலைகளிலும் ஆங்கிலக் கல்வியை அபிவிருத்தி செய்ய வேண்டும். அதே போன்று தற்போது பாடசாலைகளில் 6ஆம் தரத்தில் இருந்து 13 ஆம் தரம் வரை கற்பிக்கப்படும் தொழிநுட்பக் கல்வியை முதலாம் தரத்தில் இருந்து 13ஆம் தரம் வரைக்கும் விருத்தி செய்ய வேண்டும். அத்துடன் தொழில்நுட்பக் கல்வியை தாய் மொழியில் அல்லாமல் ஆங்கில மொழியிலேயே கற்பிக்க வேண்டும். அதன் மூலமே அதன் உண்மையான கல்வியை பெற்றுக் கொள்ள முடியும். அதேநேரம் நாட்டில் இருக்கும் அனைத்துப் பாடசாலைகளையும் ஸ்மாட் வசதி உள்ள பாடசாலைகளாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு முன்னரும் பின்னரும் கல்வியில் இருந்து வெளியேறும்மாணவர்கள்தொழிற்பயிற்சிக்கல்வியை நாடினாலும், தற்போது, அதன் தரம் குறைந்துள்ளது. உயர்கல்வி வாய்ப்புகளை வலுப்படுத்த வேண்டும். உயர் கல்விக்கான வாய்ப்புகளை இழந்தோர்களுக்கான வாய்ப்புகளையும் விரிவுபடுத்த வேண்டும். நாட்டில் 70 வீதமானவர்களுக்கு பல்கலைக்கழக வாய்ப்பு கிடைப்பதில்லை. அவர்களுக்கும் உயர்கல்விக்கான உரிமை வழங்கப்பட வேண்டும்." – என்றார்.

# கற்பிட்டி ஆலங்குடாத் தோட்டத்தில் புதையல் தோண்டிய 04 பேர் கைது!

## குவேனியின் செம்பு குடத்தைத் தேடினராம்

**(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)**

கற்பிட்டி ஆலங்குடாவில் குவேனியின் செம்புக் குடம் உட்பட்ட புதையலை தேடித் தோண்டிய நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



கற்பிட்டி, ஆலங்குடாவில் புத்தளம் மாவட்ட பதில் நீதிவான் எம்.எம் இக்பாலின் 25 ஏக்கர் தோட்டத்தில் காவலாளி உட்பட நான்கு பேர் கடந்த சில நாள்களாக இரவு நேரங்களில் புதையல் தோண்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இது பற்றித் தோட்ட உரிமையாளர் நுரைச்சோலை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டிற்கு அமைய நுரைச்சோலை பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் டபிள்யூ. எஸ் பிரேமசிறி தலைமையிலான பொலிஸ் குழு புதையல் தோண்டப்பட்டதாக கூறப்படும் தோட்டத்தை சுற்றிவளைத்தமையுடன் சந்தேக நபர்கள் நான்கு பேரையும் கைது செய்துள்ளது.

இந்தத் தோட்டத்தில் கடந்த 15 வருடங்களாக காவலாளியாகக் கடமை புரிந்து வரும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தோட்டத்தில் குவேனி பாவித்ததாகக் கூறப்படும் செம்பு வகையைச் சேர்ந்த குடம் ஒன்று புதைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அதனை தேடியே புதையல் தோண்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரிவித்துள்ளார் என அறிய வந்தது.

கைது செய்யப்பட்ட 04 சந்தேக நபர்களும் புத்தளம் மாவட்ட பதில் நீதிவான் ஏ.எம்.சம்சுல் ராபி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது எதிர்வரும் 11 ஆம் திகதி வரை அவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

# கற்பிட்டி – கீரிமுந்தல் களப்புப் பகுதியில் 465 கிலோ பீடி இலைகள் மீட்கப்பட்டன





(ரஸீன் ரஸ்மின்)

கற்பிட்டி – கீரிமுந்தல் களப்புப் பகுதியில் சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்ட ஒருதொகை பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப் பட்டுள்ளன.

எனினும் இது தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை எனக் கடற் படையினர் தெரிவித்துள்ளனர்.

வடமேற்கு கடற்படை கட்டளையின் விஜய கடற்படையினரால் கீரிமுந்தல் களப்பு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே இந்த பீடி இலைகள் மீட்கப்பட்டுள் ளன.

இதன்போது, அந்தக் களப்பு பகுதி யில் சந்தேகத்திற்கிடமான 8 மூடைகள் காணப்பட்டுள்ளன. அந்த மூடைகளைச் சோதனையிட்ட போது அவற்றில் பீடி இலைகள் இருப்பது தெரியவந்துள் ளது.

எட்டு மூடைகளில் இருந்து ஈரமான எடையுடன் 465 கிலோ கிராம் பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என கடற்படையினர் தெரிவித்தனர்.

அந்த பீடி இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கடற்படையினரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த மூன்று மாதங் களில் கற்பிட்டி பிரதேசத்தில் இப்பந் தீவு, கீரிமுந்தல், மாம்புரி மற்றும் தளுவ உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சட்ட விரோதமாக நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட பல கோடி ரூபா பெறுமதி யான பீடி இலைகள் கடற்படையின ரால் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு சொந்தமான கடல் மற்றும் கரையோரப் பகுதியில் சட்ட விரோத நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில் இலங்கை கடற்படையினர் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவடிக் கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நாளை ஏ9 வீதி மறிப்புப் போராட்டத்தில் பொறியியல் பீட மாணவர்கள் ஈடுபடார்!

## மாணவர் ஒன்றியத்தினர் உத்தியோகபூர்வமாக அறிவிப்பு


யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக மாணவர்களால் ஏ9 வீதியை மறித்து எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளதாக வெளிவந்த செய்திகளுக்கும், யாழ். பல்கலைக் கழகப் பொறியியல் பீட மாணவர்க ளுக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை என்றும், கிளிநொச்சி வளாக சிங்கள – தமிழ் மாணவர்கள் என்ற பெயரில் அனுப்பப்பட்ட மின்னஞ்சல்கள் அனைத்தும் பொய்யானவை என்றும் யாழ். பல்கலைக்கழகப் பொறியியல் பீட மாணவர் ஒன்றியத்தினர் அறி வித்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் கடந்த மாதம் 27ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப் பில் இருந்து உயிரிழந்தவர்களை நினைவு கூரும் வகையில் மாவீரர் நாள் நிகழ்வுகள் நடைபெற்றமை தொடர்பாக, பொறியியல் பீட சிங் கள – தமிழ் மாணவர்கள் என்ற பெயரில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் உட்படப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் பலருக்கு அநாமதேய மின்னஞ்சல்கள் அனுப் பப்பட்டிருந்தன.

அதன் தொடர்ச்சியாக 7 ஆம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சி, அறிவி யல் நகரில் ஏ9 வீதியை மறித்துப் போராட்டமும், பேரணியும் நடாத்தப் படவுள்ளதாகவும், அதனைத் தவிர்ப் பதற்காக கிளிநொச்சி வளாகத்தில் அமைந்துள்ள பீடங்களின் பீடாதி பதிகள் பதவி விலக்கப்படுவதோடு, நிகழ்வுகளில் ஈடுபட்ட மாணவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் கிளி நொச்சி வளாக மாணவர் ஒன்றியம் என்ற பெயரில் பேராட்ட முன்னறி வித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பிலேயே, யாழ். பல்க லைக்கழகப் பொறியியல் பீட மாணவர் ஒன்றியம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நண்பகல் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழுத் தலைவருக்குக் கடிதமொன்றினை அனுப்பி வைத் துள்ளனர்.

அந்தக் கடிதத்தில், "யாழ். பல்க லைக்கழகப் பொறியியல் பீட மாண வர் ஒன்றியத்தினராகிய நாங்கள் JaffnaEngineering2023@protonmail.com என்ற பெயரில் பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுத் தலைவர் உட்படப் பலருக்கு முறைப்பாட்டுக் கடிதங்கள் அனுப்பப் பட்டுள்ளன என அறிகின்றோம்.



Engineering Students' Union
University of Jaffna - Sri Lanka

Thank you

President,
Engineering students' union,
University of Jaffna.

Secretary,
Engineering students' union,
University of Jaffna.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொறி யியல் பீட மாணவர்களுக்கென ஒரே யொரு மாணவர் அமைப்பாக எமது அமைப்பே இயங்கி வருகிறது. எமது பீட மாணவர்களுக்கென வேறெந்த அமைப்பும் கிடையாது.

அத்துடன் எதிர்வரும் 7 திகதி மேற் கொள்ளப்படவுள்ள போராட்டங்களுக் கும் எமக்கும் எவ்விதமான தொடர்பு களும் கிடையாது என்பதோடு, எமது மாணவர்கள் எந்தப் போராட்டத்திலும் கலந்து கொள்ள மாட்டார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 06.12.2023



### மேஷம்

நீங்கள் எடுத்த முயற்சியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பும் முன்னேற்றமும் காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

உங்கள் பணிகளை திறமையாக கையாள்வீர்கள். புதிய வாய்ப்புகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. உங்கள் முயற்சிகளுக்கு உரிய அங்கீகாரம் பெருவீர்கள்.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் உண்மையான உறவினை பகிர்ந்து கொள்வீர்கள்.

பணவரவு திருப்தியை அளிக்கும். உங்கள் வங்கியிருப்பு வளர்வதைக் காண்பீர்கள்.

அமைதியான அணுகுமுறை காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



### ரிஷபம்

இன்று திருப்தியற்ற குழப்பமான மனநிலையில் காணப்படுவீர்கள். அதனால் உரிய முயற்சிகள் எடுப்பது கடினமாக இருக்கும். தியானம் மேற்கொள்வது நல்லது.

அதிகப் பணிகள் காணப்படும். முறையாக திட்டமிட்டால் குறித்தநேரத்தில் பணிகளை முடிக்கலாம்.

உங்கள் துணையிடம் சாதரணமான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க இது அவசியம்.

இன்று பணப்பற்றாக்குறை கவலையை அளிக்கும். பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை உண்டாக்கும்.



### மிதுனம்

இன்றைய நாள் சிறப்பாக இருக்காது. ஆன்மீகம் தொடர்பான பயணங்கள் நல்லது. இது அமைதியையும் ஆறுதலையும் தரும்.

இன்று பணிகள் சலிப்பைத் தரும். கூடுதல் பொறுப்புகள் ஏற்க வேண்டியிருக்கும். உங்கள் பணிக்கு பாராட்டும் அங்கீகாரமும் கிடைப்பது கடினம்.

மன சஞ்சலங்களை எதிர் கொள்ள நேரும். இதனால் துணையுடனான உறவில் மகிழ்ச்சியை பராமரிப்பது கடினமாக இருக்கும்.

பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை.

செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகளால் பாதிப்பு ஏற்படும். உரிய நேரத்தில் உணவு உண்ண வேண்டும்.



### கடகம்

இன்று சாதகமான நாளாக இருக்கும். உங்கள் நெருங்கிய நண்பர்களின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். புதிய மனிதர்களை சந்திப்பீர்கள்.

உங்கள் பணிக்காக மேலதிகாரிகளின் அங்கீகாரம் பெறுவீர்கள். உங்கள் திறமை பாராட்டைப் பெரும். பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் அவரின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். சேமிப்பு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

கடவுள் அருளால் இன்று ஆரோக்கியமாய் இருப்பீர்கள்.



### சிம்மம்

இன்று ஆற்றலும் தன்னம்பிக்கையும் குறைந்து காணப்படும். இந்த மன நிலை உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். உங்களிடம் தனிமை உணர்வு காணப்படும். இன்று எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு எதிராக அமையும்.

உங்கள் பணிகளில் தாமதங்கள் ஏற்படும். எனவே திட்டமிட்டு முறையாக பணியாற்றுவது நல்லது.

உங்கள் துணையிடம் அற்ப விஷயங்களில் குறை காண்பீர்கள். நல்லுறவை ஏற்படுத்த சகஜமான அணுகுமுறை தேவை.

உங்கள் நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. உங்கள் பணத்தை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. பல் வலிக்கான வாய்ப்பு உள்ளது.



### கன்னி

இன்று நீங்கள் பதட்டத்துடன் குழப்பமான மனநிலையில் இருப்பீர்கள். உணர்ச்சி வசப்படாமல் அமைதியைப் பராமரித்தால் நற்பலன்களைக் காணலாம்.தெய்வீக இசை கேட்பது ஆறுதல் தரும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியில் பதட்டமான சூழ்நிலை காணப்படும். உங்கள் சகபணியாளர்களிடம் நல்லுறவை பராமரிக்க முடியாது.

குறைவான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் வாக்குவாதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. மௌனம் கடைபிடிப்பது சிறந்தது.

நிதிநிலைமை இழுபறியாக இருக்கும். பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் நிதிநிலையை கண்காணிக்க வேண்டும்.

தோல் ஒவ்வாமை காரணமாக தூக்கம் கெடும்.



### துலாம்

இன்றைய நாள் துடிப்பாக இருக்கும். உங்கள் நம்பிக்கை நிறைந்து காணப்படும். எதிர்கால நலன் கருதி முக்கிய முடிவுகள் இன்று எடுக்கலாம்.

பணியிடத்தில் சுமூகமான சூழ்நிலை காணப்படும். முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும்.இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்களின் இனிமையான தொடர்பு காரணமாக உங்கள் துணையுடனான உறவில் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

பண வரவு மகிழ்ச்சிகரமாக இருக்கும். எதிர் கால பாதுகாப்பு கருதி மணம் சேமிக்கும் வாய்ப்பும் காணப்படும்.

உங்கள் ஆரோக்கியம் சீராக இருக்கும். ஆரோக்கியத்தை பராமரிக்கும் அளவிற்கு உங்களிடம் ஆற்றலும் உறுதியும் காணப்படும்.



### விருச்சிகம்

இன்று நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள். உங்கள் முயற்சிக்கான பலனைப் பெறுவீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

பணியிடச்சூழல் சீராக இருக்கும். புத்திசாலித்தனத்துடன் நீங்கள் செய்யும் முயற்சிகளில் உங்கள் நன்மதிப்பு உயரும்.

உங்கள் குடும்பத்தில் நடக்கும் சுப நிகழ்சிகள் காரணமாக உற்சாகமாக இருப்பீர்கள். இந்த நிகழ்சிகள் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள்.

இன்று பணவரவு மகிழ்சிகரமாக இருக்கும். தேவைப்படும் அளவிற்கு பணம் காணப்படும். திருப்திகரமாக இருக்கும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 06.12.2023




இன்று சிறப்பான நாளாக இருக்கும். எதிர்ப்பாராத நன்மைகள் இன்று காணப்படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியும் திருப்தியும் அளிக்கும். விருந்தினர்களின் வருகை உற்சாகத்தை அளிக்கும்.

பணியிடச் சூழல் இனிமையாக இருக்கும். உற்சாகமான வாய்ப்புகள் காணப்படும். பணியைப் பொருத்த வரை இன்று சிறப்பான நாள்.

உங்களின் பாராட்டு வார்த்தைகள் உங்கள் துணையை திருப்தியடையச் செய்யும். நீங்கள் இருவரும் மறக்க முடியாத தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதிநிலையில் பயன் பெறக் கூடிய அதிர்ஷ்டம் காணப்படுகின்றது. அதிக அளவில் பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. கவனமாக மற்றும் உறுதியுடன் உங்கள் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். தெய்வீகப் பாடல்கள் மற்றும் ஸ்லோகங்கள் சொல்வது நல்ல பலனைத் தரும்.

பணியிடத்தில் விவேகத்துடன் செயலாற்றினால் வெற்றி நிச்சயம். சக பணியாளர்களிடமிருந்து தொல்லைகள் ஏற்படலாம்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் தக்க வைக்க முடியாது. நல்லுறவைப் பின் இத்தகைய உணர்வுகளை புறக்கணித்தல் வேண்டும்.

பண வரவு குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் கவலையை அளிக்கும்.




இன்று நீங்கள் வருத்தத்துடன் காணப்படுவீர்கள். உணர்ச்சிவசப்படாமல் உங்களை நீங்கள் அமைதியாக வைத்திருங்கள். இனிமையான இசையைக் கேட்பதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் பதட்டமான சூழல் காணப்படும். ஓய்வெடுக்க நேரம் காணாது. திட்டமிட்டு ஒழுங்கான முறையில் பணியாற்றுவது சிறந்தது.

உங்களின் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இதனை தவிர்த்தல் நல்லது.

குடும்பத்திற்காக அதிகம் செலவழிக்க நேரும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக நிதிநிலைமையை சாதுர்யமாக கையாள்வது கடினமாக இருக்கும்.

பதட்டம் காரணமாக தோள் வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. இது உங்கள் மகிழ்ச்சியை பாதிக்கும்.




இன்று நல்ல பலன்கள் தரும் சிறப்பான நாள். விட்டுக்கொடுப்பதன் மூலம் நன்மை கிடைக்கும். இன்று நல்ல நண்பர்கள் கிடைப்பார்கள்.

இன்று பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். சக பணியாளர்களின் ஆதரவு திருப்தியை அளிக்கும். பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும்.

உங்கள் துனையிடத்தில் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதன் மூலம் இருவரிடையே நல்லுறவு காணப்படும்.

இன்று உங்கள் நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் பணிக்கான கூடுதல் பணம் ஊக்கத் தொகையாக கிடைக்கும்.

இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உடல் ஆரோக்கியம் சேறாக இருக்கும்.









# பூண்டுலோயாவில் மண் மேடு சரிந்து







(தலவாக்கலை பி.கேதீஸ்)

நேற்று முன் தினம் இரவு பெய்த கடும் மழை காரணமாக கொத்மலை பிரதேசத்திற்குட்பட்ட வடக்கு பூண்டு லோயா மேல் பிரிவுக்கு செல்லும் பிரதான வீதியில் மண் மேடு சரிந்து விழுந்ததால் அவ்வழி ஊடான போக்குவரத்து தடைப்பட்டது.

இதனால் நேற்று பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் இதர தொழில் துறைக்கு செல்வோரும் பாரிய அசௌகரியத்துக்குள்ளாகினர்.

# போதைப்பொருள் பாவனைக்கு எதிராக நேற்று மாற்றுத்திறனாளிகள் விழிப்புணர்வு ஊர்வலம்









(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் டிசம்பர் மூன்றாகும். இதனை முன்னிட்டு மருதமுனை ஹியூமன் லின்க் மாற்றுத்திறனாளிகள் வளப்படுத்தல் மத்திய நிலையம் ஏற்பாடு செய்த – போதைப்பொருள் பாவனைக்கு எதிரான – விழிப்புணர்வு வீதி ஊர்வலம் மருதமுனையில் நடைபெற்றது.

மருதமுனை பிரதான வீதியின் பெரிய நீலாவணை சந்தியில் ஆரம்பித்த இந்த விழிப்புணர்வு வீதி ஊர்வலம் பிரதான வீதி வழியாக வந்து மருதமுனை வைத்தியசாலை, ஷம்ஸ் மத்திய கல்லூரி பாடசாலை அமைந்திருக்கும் பிரதான வீதி வழியாக மீண்டும் வளப்படுத்தல் மத்திய நிலையத்தை வந்தடைந்தது.

"போதை ஆயுளை அளிக்கும்", "ஒன்றிணைவோம் போதையை ஒழிக்க", "எங்களை ஒதுக்காதீர்கள்!" போன்ற சுலோகங்கள் மற்றும் சித்திரங்களைத் தாங்கியவாறு மாணவர்கள் ஊர்வலமாகச் சென்றனர். வீதி வழியாக சென்ற மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு தனவந்தர்கள் தமது அன்பளிப்புக்களையும் வழங்கினார்கள்.

இதில் வளப்படுத்தல் மத்திய நிலையத்தின் பணிப்பாளர் ஏ.கமறுத்தின், பணிப்பாளர் சபை உறுப்பினர் எஸ்.எல்.அஜமல்கான் உட்பட வளப்படுத்தல் மத்திய நிலையத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், ஆசிரியர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், சமூக மட்டத்திலான ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.